கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.5/2025
இன்
இடைநிலை மனு எண்.2/2024
இன்
அசல் வழக்கு எண்.231/2024
* * * *

1) அழகம்மாள்
2) முத்துலெட்சுமி
3) வெள்ளைத்தாய் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1) ராமக்காள்
2) முத்துராம்
3) சின்னராம்
4) ராமக்காள்
5) கிருஷ்ணமூர்த்தி
6) விநாயகமூர்த்தி
... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 11.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.S.திருநாவுக்கரசு அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் துறையிலிருந்து ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி விதி 75(1) மற்றும் (2) மற்றும் கட்டளை 16 விதி 6 மற்றும் 7 மற்றும் பிரிவு 151 cpc படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1) மனுதாரர்கள் தரப்பில், வழக்கு சொத்தில் சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகளான கண்காணிப்பாளர், சுத்த நகல் பிரிவு, ஆட்சியர் அலுவலக கட்டிடம், மதுரை மற்றும் மதுரை, திருப்பரங்குன்றம், தாசில்தார் அவர்களுக்கு சம்மன் அனுப்பி, அவர்கள் பாதுகாப்பில் உள்ள வழக்கு சொத்துக்கான வருவாய் கணக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**தீர்மானிக்க வேண்டிய விசயம்** :

4. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு** :

5. மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், வழக்கு சொத்தில் சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகளான கண்காணிப்பாளர், சுத்த நகல் பிரிவு, ஆட்சியர் அலுவலக கட்டிடம், மதுரை மற்றும் மதுரை, திருப்பரங்குன்றம், தாசில்தார் அவர்களுக்கு சம்மன் அனுப்பி, அவர்கள் பாதுகாப்பில் உள்ள வழக்கு சொத்துக்கான வருவாய் கணக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. அசல் வழக்கானது கடந்த 2024ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், இம்மனுவானது வருவாய் துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறை சட்ட விதி 75ன் கீழ் நீதிமன்றம் மூலம் ஆவணங்கள் வரவழைப்பதற்கு முன்பாக மேற்படி ஆவணங்களை பெறுவதற்கு சட்டப்படியான வழிமுறைகளை

மேற்கொண்டும், சட்ட விதிமுறைகளை பின்பற்றியும் மேற்படி விதி 75ன் கீழ் மனு தாக்கல் செய்ய வேண்டியது சட்டப்படியானது ஆகும்.

7. இந்நிலையில், மேற்படி அலுவலகத்தில் ஆவணங்கள் கேட்டு மனு தாக்கல் செய்ததாக மனுதாரர்கள் தரப்பில் கூறிய போதும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் பொறுத்து உரிய அலுவலகத்தில் பெற சட்டப்படியான நடவடிக்கை எடுத்ததாக மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யும் விதமாக சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

8. மேலும், மேற்படி சம்பந்தப்பட்ட வருவாய் துறை அலுவலர்கள் மூலமாக கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்பது சட்டப்படியானது என்பதை நிரூபணம் செய்யும்விதமாக மனுதாரர்கள் தரப்பில் மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி, மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் 75ன் கீழ் உள்ள விதிகளின் கீழ் உட்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாலும், வழக்கு சொத்தில் சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகளான கண்காணிப்பாளர், சுத்த நகல் பிரிவு, ஆட்சியர் அலுவலக கட்டிடம், மதுரை மற்றும் மதுரை, திருப்பரங்குன்றம், தாசில்தார் அவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியாக சாட்சியமளிக்க வேண்டியது சட்டப்படியானது என்பதை மனுதாரர்கள்

தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதாலும், இம்மனுவானது அசல் வழக்கின் காலதாமதத்தை ஏற்படுத்தும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனு உரிய முறையில் வடிவமைக்கப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.28 17:33:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

<u>**இணைப்பு:**</u>

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.28 17:33:58 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 5 /2025
இன்
இடைநிலை மனு எண். 2 /2024
அசல் வழக்கு எண்.231/2024
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 28.11.2025